**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 96 /2021 PW . 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலசுப்பிரமணியன் | தந்தை/கணவர் பெயர்: அய்யாக்கண்ணு | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**25.06.2026 சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. சம்பவம் இடம் சூரக்குடி பேருந்து நிறுத்தலிருந்து 1 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. சம்பவ நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். அண்ணாநகர் வழியாக வந்தால் காளப்பூர் தான் வரமுடியும் என்றால் சரிதான். நவீன் குமாருக்கு சொந்த ஊர் சூரக்குடி என்றால் முறையூர் ஆகும். நவீன்குமாரை அண்ணாநகரில் இறக்கிவிட்டேன். அண்ணாநகரில் நவீன் குமார் பாட்டி வீடு உள்ளதால் அங்கு இறக்கி விட்டேன்.

2. இரு சக்கர வாகனத்தில் பின்னால் வந்து தாக்கிய பிறகு தான் எனக்கு சம்பவத்தை தெரியும். சம்பவ சமயத்தில் என்னை தவிர வேறு யாரும் அங்கு இல்லை. தெருவிளக்குகள் இல்லை. இருட்டான நேரம் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் சம்பவம் நடந்த 1 மணி நேரத்தில் புகார் கொடுதேன். போலீசார் என்னை சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். மறுநாள் காலையில் மருத்துவமனையில் வைத்து போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

3. நான் எஸ்.வி.மங்களம் காவல் நிலையம் சென்ற போது எழுதுமூலமான புகார் கொடுக்கவில்லை. சிங்கம்புணரி அரசு மருத்துவமனை சென்று திரும்பிய பின்னர் புகார் கொடுத்தேன். என்னுடைய இருசக்கர வாகனத்தை போலீசார் எடுத்து செல்லவில்லை.

எனது இரு சக்கர வாகனத்தின் பதிவெண் 5881 ஆகும். எனது இருசக்கர வாகனத்தின் பதிவெண், எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் பதிவெண் எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். இரண்டு வாகனத்தையும் போலீசார் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரி கட்டை கம்பை என்ன செய்தார் என்று தெரிய வில்லை. இருட்டில் தெரியவும் இல்லை. போலீசார் கட்டை கம்பை கைப்ற்றினார்களா என்று எனக்கு தெரியாது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் வண்டியில் இருந்த நான் கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.